### பிரம்மபுத்ராவில் சீனாவின் பிரம்மாண்ட அணையால்

# இந்தியாவுக்குப் பேராபத்து: ஒன்றிய அரசின் எதிர் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 29-

உலகின் மிகப்பெரிய அணையை இந்திய எல்லையில் இருந்து 50 கிலோ மீட்டர் அருகில் சீனா தனது எல்லைப் பகுதியான திபேத் மாகாணத்தில் ஓடும் பிரம்மபுத்ரா ஆற்றின் குறுக்கே அமைத்து வருவதாகவும், அதனால் இந்திய மாநிலமான அருணாச்சல பிரதேசத்தில் பேரழிவு விளைவிக்கும் ஆபத்து உள்ளதாகவும் பல்வேறு அச்சு ஊடகங்களில் வெளியாகி உள்ள செய்திகள் அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதா? அப்படியானால், இந்த அணைத்திட்டத்துக்கு இந்தியாவின் எதிர்ப்புகள் சீன அரசிடம் முறையாகத் தெரிவிக்கப் பட்டுள்ளதா? அதன் விவரங்கள் என்ன? என பிரம்மபுத்ரா நதியில் சீனா கட்டிவரும் பிரம்மாண்டமான அணை குறித்த கேள்வியை திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நடப்பு நாடாளுமன்றத் தொடரில் எழுப்பித் தாக்கல் செய்திருந்த நிலையில் , இந்த கேள்விக்கு நேற்று முன்தினம் (27.3.2026) ஒன்றிய வெளியுறவுத்துறையின் இணை அமைச்சர் மக்களவையில் பதில் அளித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் விளக்கம் வருமாறு :

திபேத் பகுதியில் யார்லுங்க் சாங்க்போ நதியில், அதாவது பிரம்மபுத்ரா ஆற்றின் மேலோடைப் பகுதியில் மிகப்பெரிய அணை கட்டும் பணிகளை சீன அரசு தொடங்கிய செய்திகளை இந்திய அரசு தன் கவனத்தில் கொண்டுள்ளது.

இந்த அணை தொடர்பான தகவல்கள் 1986 ஆம் ஆண்டு தொட்டே வந்த வண்ணம் உள்ளன. எனவே, அப்போதிருந்தே இந்த திட்டத்தின் கீழ் அமைய உள்ள புனல்மின் உற்பத்தி நிலையம் பற்றிய தகவல்கள், மற்றும் அணைக் கட்டமைப்பினால் கீழோடையான பிரம்மபுத்ரா பாயும் இந்திய நிலப் பகுதிகளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகள் குறித்தும் அரசு கண்காணித்து வருவதுடன், இந்திய மக்களின் பாதுகாப்பு மட்டுமல்லாமல் அவர்தம் வாழ்வாதாரங்கள் மீதான தாக்கத்தை எல்லாண் எதிர்கொள்ளவும் உரிய திட்டங்களை அரசு மேற்கொண்டு வருகிறது.

இதுபோன்ற எல்லை கடந்த நதிகள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் இந்தியாவில் அமைந்துள்ள நதியின் கீழோடைப் நிலப் பகுதி வாழ் மக்களின் நிலை நாட்டப் பட்ட நதிநீர் உரிமைகள் குறித்த இந்திய அரசின் கலலைகள் அனைத்தும் சீனாவிடம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

இந்த விஷயம் தொடர்பாக 2006 ஆம் ஆண்டில் நிறுவன ரீதியாக உருவாக்கப்பட்ட ஒரு இருநாடுகளின் "நிபுணர்கள் நிலை அமைப்பு"( INSTITUTIONALISED EXPERT LEVEL MECHANISM) வாயிலாகவும் தூதரக த் தொடர்புகள் மூலமாகவும் இந்த பிரச்சினை சீன அரசுடன் பலமுறை விவாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், சென்ற 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று, சீனாவில் உள்ள டியான்ஜின் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ( ஷாங்காய் கோ ஆபரேஷன் ஆர்கனைசேஷன்) கூட்டத்தில் பங்கேற்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சீன அதிபர் ஜீ ஜிங்க் பின் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதும் இந்த அணை தொடர்பான பிரச்சினையையும் இந்திய அரசின் கவலை குறித்தும் எடுத்துரைத்தார்.

இவ்வாறு அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

# கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து


# "வெல்வோம் 200-படைப்போம் வரலாறு!"

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர், 2021 ஆம் ஆண்டு தன்னுடைய தலைமையில், தமிழ்நாட்டில் பெற்ற வெற்றியினைத் தொடர்ந்து வெற்றிப்படிக்கட்டுகளில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறார் என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

இதனைத்தொடர்ந்துநடைபெறவுள்ளதமிழ்நாட்டிற்கான சட்டமன்றத் தேர்தல், புதியச் சட்டமன்றத்திற்கான தேர்தல் எனினும், சித்தாந்த அடிப்படையில் ஒன்றிய பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சிக்கும் தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் ஆகிய தமிழின அடிப்படை கருத்தியலை, இயங்கு சக்தியாக கொண்ட "திராவிட மாடல்" ஆட்சியின் வீச்சுக்கும் நடைபெறவிருக்கும் கருத்தியல் போர்க்களம்தான் 2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் நடைபெறவுள்ள தேர்தல்களமாகும்.

இந்த உண்மையை தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். புரிந்தவர்கள்புரியாதவர்களுக்கு விளங்க வைக்க வேண்டும். இந்தப் பணியென்பது ஜனநாயகக் கடமை மட்டுமல்ல, மீண்டும் தமிழ்நாடு வேதகால சனாதன வர்ணாசிரமக் கோரப்பிடியில் சிக்கிவிடக்கூடாது, ஆம்! வெடித்துச் சிதறிய எரிமலைச் சிதறல்களால் தாக்கப்பட்ட பகுதியாக தமிழ்நாடு ஆக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்கான தன்மானஇனமான சுயமரியாதைப் போர்க்களம்தான் வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்களமாகும்.

நடைபெறவிருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க அரசால் ஏவிவிடப்படும் வேதகால கலாச்சார படையெடுப்பைத் தடுத்து, தகர்த்து தமிழ்நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க வேண்டிய கடமையும், விழிப்புணர்வும் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு என்பதை உளமாற உணர்ந்து இந்தக் கலாச்சார படையெடுப்பைத் தடுத்து நிறுத்தி தன்மானத் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான "திராவிட மாடல்" அரசை உறுதிசெய்ய வேண்டும்.



**பொன்.முத்துராமலிங்கம்**

முன்னாள் அமைச்சர்

கழக உயர்நிலை

செயல் திட்டக்குழு உறுப்பினர்

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை எதிர்த்துக் களம்காணும் அ.தி.மு.க உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தமிழர்களின் நலன்களை காவு கொடுத்தாவது தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற வணிக நோக்கத்தை அச்சாணியாக்கி, அரசியல் தேரோட்டத்தில் வடம்பிடித்து இழுப்பவர்கள்தான். இவர்கள் எப்பொழுது இழுக்க வேண்டும், எப்படி இழுக்க வேண்டும் என்பதற்கான "வெள்ளை வீசும்" அதிகாரம் ஒன்றிய பாரதீயக் கட்சியின் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் உண்டு என்ற அடிமை சாசனம்தான், தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் ஒப்பந்தமாகும். (National Democratic Alliance)

இந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு நிரந்தரமான கொள்கை கோட்பாடுகள், வழிமுறைகள் உண்டா, என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும்? ஒரு அரசியல் இயக்கம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கு சட்டவடிவம் கொடுத்து மக்களுக்கு பயன்படும் வகையிலும், பாதுகாக்கும் முறையிலும், செயல்படுத்துவதற்குதான், தேர்தல் மூலம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும்.

ஆம்! அதன்படி செயல்படுத்தும். தமிழ்நாட்டில் அ.தி.மு.க தலைமையேற்றுள்ள இந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி எந்தக் கொள்கை முடிவை சட்டங்கள் மூலம் அமல்படுத்தவுள்ளது என்பதை இதுவரையில், அ.தி.மு.க தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிவித்துள்ளதா? இல்லை! ஏன்? சட்டியில் இல்லை எனவே அகப்பையில் வரவில்லை, என்றைக்கும் வரப்போவதில்லை! ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகள் இப்படி கேட்க இயலுமா? நிச்சயமாக இயலாது. காரணம் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் தொடர்ந்து "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்கின்ற அரசியல் கோட்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

அது மட்டுமல்ல, இந்தக் கோட்பாட்டை இந்திய ஒன்றியத்திலுள்ள பெரும்பாலான மாநிலங்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இதற்கான விளக்கங்களையும், ஆய்வறிக்கைகளையும் வெளியிட்டு இந்திய ஒன்றியம் முழுமையும், இந்த அரசியல் கோட்பாடு குறித்து விழிப்படைய செய்தது மட்டுமல்ல, இந்தக் கோட்பாட்டை அரசியல் சட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். அதற்கான அரசியல் சட்டத் திருத்தம் அவசியம் (Constitutional Amendment) என வலியுறுத்திக் கொண்டிருக்கும் அரசியல் கட்சியின் தலைவர்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை யாரால் மறைக்க முடியும், அல்லது மறுக்க முடியும்.

இந்தக் கூட்டாட்சி முறைதான் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையை நிரந்தரமாக காப்பாற்ற முடியும், மாநிலங்களும், தன்நிறைவோடு, அரசியல் பயணத்தைத் தொடரமுடியும் என்பதை எந்தச் சூழ்நிலையிலும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருப்பது திராவிட முன்னேற்ற கழகம்தான் என்பதையும், அதற்கான அரசியல் ஆதாரங்களையும், அரசியல் சட்ட அறிஞர்களின் அறிக்கைகளையும், போராட்டங்களையும், முன்னெடுத்து மக்களிடம்விழிப்புணர்வைஉருவாக்கிக்கொண்டிருப்பதை யாரால் மறுக்கவியலும்.

ஆட்சி மொழிப் பிரச்சினைகளில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென தெளிவானதும், தீர்க்கமானதுமான கொள்கை உண்டு. அது மட்டுமல்ல நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு எள் முனையளவு சேதம் ஏற்படுத்த முயற்சித்தாலும், இந்தி மொழியை தமிழ்நாட்டில் திணிக்க முற்பட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம், விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் போர்க்களம் காண்பதற்குதயாராகும்இயக்கம்என்பதைகடந்தகாலத்தில் நிரூபித்து வரலாறு படைத்த இயக்கம் மட்டுமல்ல, இனியும் அதற்கு தயாராக வுள்ள இயக்கம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

தேசிய கூட்டணிக்கு இந்தச் சட்டமன்றத் தேர்தலில் தலைமை தாங்கும் அ.தி.மு.க.வும் எடப்பாடி பழனிச்சாமியும் இந்தி திணிப்பினை எதிர்த்து இத்தகைய முடிவினை எடுக்க முடியுமா? என்பதையும் அதற்கு பாரதிய ஜனதா கட்சி ஏற்றுக் கொள்ளுமா என்பதையும், இந்த தேர்தலில் சிந்தித்துப் பார்த்து வாக்களிக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது என்பதை இந்த கட்டுரையின் மூலம் நினைவு படுத்த விரும்புகிறேன்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, ஏட்டிக்குப் போட்டியாக விலையில்லா பொருட்களை தனது தேர்தல் அறிக்கையில் வழங்கியுள்ளார்கள். அதில், ஒன்றுதான் "பிரிட்ஜ்". எடப்பாடியார் தொலைநோக்குச் சிந்தனையோடு, தன்னுடைய கூட்டணியும், சின்னங்களும் காலப்போக்கில் அழுகிப்போகாமல், கருகிப்போகாமல் இருக்க, தங்களின் கூட்டணிப் பாதுகாப்புக் கருதியும் இப்படி அறிவித்திருக்கிறார் என்று மக்கள் பொதுவிடங்களில் நகைச்சுவையாக விமர்சிப்பதை பார்க்கவும், கேட்கவும் முடிகிறது. எனவே, தேசிய ஜனநாயகக் கூட்டணியை அவர்களது விருப்பப்படி வாக்காளர்கள் "பிரிட்ஜில்" வைத்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குப் பெரும் வெற்றியினை வழங்குவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!!

எனவே, அனைத்து மக்களும் அணிவகுப்போம், தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில்!

**வெல்வோம் 200 !**

**படைப்போம் வரலாறு!!**

### கூட்டணியில் எந்த இழுபறியும் இல்லை;

# எங்களுக்கு விரும்பிய தொகுதிகள் கிடைத்துள்ளன!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பேட்டி!



சென்னை, மார்ச் 29-

"திருப்திகரமான, சுமுகமான அளவில் பேச்சு வார்த்தை நடந்தது. நாங்கள் விரும்பிய தொகுதிகள் எங்களுக்குகிடைத்துள்ளன" என்று வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் விசிக தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைக்குப் பின் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று முன்தினம் (மார்ச்.27) செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

"வி.சி.க. போட்டியிடும் 8 தொகுதிகள் எவை என முடிவாகி விட்டன. தொகுதிகள் குறித்த அதிகாரபூர்வமான அறிவிப்பை தி.மு.க. தலைவர் -முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பார்.

திருப்திகரமான, சுமுகமான அளவில் பேச்சு வார்த்தை நடந்தது. நாங்கள் விரும்பிய தொகுதிகள் எங்களுக்குகிடைத்துள்ளன.

திமுக கூட்டணியில் கடைசி நேரத்தில் பிரச்னைகள் வெடிக்காதா? என்று காத்திருப்பவர்கள் ஏமாறப் போகிறார்கள். அப்படி கூட்டணிக்குள் எந்த பிரச்னையும் இல்லை.

அவர்கள் சொல்வதைப் போல எங்கள் கூட்டணியில் எந்த இழுபறியும் இல்லை. 10-க்கும் மேற்பட்ட கட்சிகள் ஒரு கூட்டணியில் இருக்கும் போது வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதில் தாமதம் இருக்கத்தான் செய்யும்.

இதைத்தான் எதிர் கூட்டணிக்காரர்கள் இழுபறி என்கிறார்கள். அப்படி எந்த இழுபறியும் இல்லை என்பதுதான் எதார்த்தமான உண்மை" என்று பேசியிருக்கிறார்.

### வணிகர் நலன் காக்கும்

# தி.மு.கழகக் கூட்டணியை ஆதரிப்பீர்!

## வணிகர் நல வாரிய நிர்வாகக் குழு உறுப்பினர் சேப்பாக்கம் வி.பி.மணி வேண்டுகோள்!

சென்னை, மார்ச். 29–

வணிகர் நலன் காக்கும் தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணியை ஆதரிப்பீர் என்று வணிகர் நல வாரிய நிர்வாகக்குழு உறுப்பினர் சேப்பாக்கம் வி.பி.மணி வணிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தமிழக "வணிகர்களின் பாதுகாவலர் தலைவர் கலைஞர் அவர்களின் அன்றைய பொற்கால ஆட்சியில் வணிகர்களுக்கு பல்வேறு வரிச் சலுகை களையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, பெருமளவில் வரிச் சீரமைப்பு செய்ததும் நமது தி.மு.கழக அரசு.

பலமுனை வரியை ஒரு முனை வரியாக்கி, வணிகர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதுகாத்ததும் தி.மு.கழக அரசு மாவட்ட எல்லைகளில் வணிகவரி அதிகாரிகள் வணிகர்களை மிரட்டி லஞ்சம் பெற பெரிதும் துணை நின்ற பல்வேறு சோதனைச் சாவடிகளை அறவே நீக்கியதும் நமது தி.மு.கழக அரசு.

இந்தியாவிலேயே முதன்முறையாக 1989 ல் தமிழ்நாட்டில் வணிகர் நல வாரியம் அமைத்ததும் தி. மு.கழக அரசு.

வணிகர் நல வாரியத்தில் தமிழக வணிகப் பிரதிநிதிகளை நிர்வாகக் குழு உறுப்பினர்களாக நியமித்து, அழகு பார்த்ததும் நமது தி.மு.கழக அரசு.

அன்றைய அ.தி.மு.க ஆட்சியில் 3 நாள் தொடர் கடையடைப்பு செய்தும், வெள்ளைக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தியும் திரும்பப் பெறாத புதிய தொழில் வரியை, பல்வேறு வகைகளாக மாற்றி மிகவும் எளிமையாக்கி, வணிகர்கள் விரும்பும் வகையில் சீரமைத்ததும் தி.மு.கழக அரசு.

பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் பலவகையான அத்தியாவசிய பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளித்ததும் நமது தி.மு.கழக அரசு.

வணிகர்களுக்கு இடையூறாக இருந்த கூடுதல் விற்பனை வரியை முழுமையாக ரத்து செய்ததும் நமது தி.மு.கழக அரசு. நமது "தாய் உள்ளம் கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் இன்றைய பொற்கால ஆட்சியில் முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் முற்றிலும் முடக்கப்பட்ட வணிகர் நல வாரியத்தை மீண்டும் சீரமைத்து, 20 நிர்வாகக் குழு உறுப்பினர்களை 30 நிர்வாகக் குழு உறுப்பினர்களாக உயர்த்தியதும் நமது தி.மு.கழக அரசு.

வணிகர் நல வாரிய ஆயுள் உறுப்பினர் சேர்க்கை பதிவுக் கட்டணம் 500 ரூபாயை 3 அரசாணைகள் மூலம் 10 மாதங்களுக்கு விலக்கு அளித்து, பல்லாயிரக்கணக்கான எளிய வணிகர்களை தொடர்ந்து பாதுகாத்ததும் நமது தி.மு.கழக அரசு.

வணிகர் நல வாரியத்தில் குடும்ப நல நிதி உதவித் தொகையை முதலில் 1 லட்சத்தில் இருந்து 3 லட்சமாக உயர்த்தியும், தற்பொழுது மீண்டும் 5 லட்சமாக உயர்த்தி, ஏழை எளிய நடுத்தர வணிக குடும்பங்களை தொடர்ந்து பாதுகாத்தது வருவதும்... நமது தி.மு.கழக அரசு

உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் உள்ள வணிக கடைகளின் குத்தகை காலங்களை 9 ஆண்டுகளில் இருந்து 12 ஆண்டுகளாக உயர்த்தி வழங்கியதும்... நமது தி.மு.கழக அரசு. நீதிமன்றங்களில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பலதரப்பட்ட வழக்குகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில்... சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாயை தள்ளுபடி அளித்து, வணிகர்கள் விரும்பும் புதிய சமாதான திட்டத்தை கொண்டு வந்ததும் நமது தி.மு.கழக அரசு.

தற்பொழுது எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மின்சார அடுப்பு பயன்படுத்தும் ஹோட்டல்களுக்கு அவர்கள், தற்பொழுது கூடுதலாக செலுத்தும் மின் கட்டணத்தில் யூனிட்டுக்கு 2 ரூபாய் கட்டணச் சலுகை வழங்கியும், மேலும் புதிய மின்அடுப்பு வாங்க கூடுதலாக மானியமும் வழங்கியதும் நமது தி.மு.கழக அரசு

இதைப் போன்ற எண்ணிலடங்கா வரிச்சலுகைகளையும், நலத்திட்டங்களையும் தொடர்ந்து கழக அரசிடம் பெற்று வரும் "நாம் நன்கு எடை போட்டு, நமது தொழில் வணிகத்தை தொடர்ந்து பாதுகாக்க, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சி தமிழ்நாட்டில் மீண்டும் மலர வணிகர்களே.! நன்றி மறவாமல் உதயசூரியன் சின்னத்தில் நாம் குடும்பத்துடன் வாக்களிப்போம்.!!!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# நீல புலிகள் இயக்கம் ஆதரவு!

## இயக்கத் தலைவர் இளங்கோவன் அறிக்கை!



சென்னை, மார்ச். 29–

தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு நீல புலிகள் இயக்கம் நிபந்தனை யற்ற ஆதரவு அளிப்பதாகவும் தி.மு.க. கூட்டணிக்காக அயராது பாடுபடுவோம் என்றும் நீலப்புலிகள் இயக்கம் தலைவர் இளங்கோவன் தெரி வித்துள்ளார்.

நீல புலிகள் இயக்கத்தின் தலைவர் இளங்கோவன் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நீலப் புலிகள் இயக்கம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் பல மாவட்டங்களில் இயங்கி வருகிறது. ஏழை எளிய சாமானிய மக்களுக்கு அரசியல் மற்றும் சமூக சேவைகள் செய்து வருகிறது என்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் தொகுதிகள் மற்றும் அரியலூர், தர்மபுரி, சேலம், திருவாரூர், புதுக்கோ ட்டை மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்றும் பல மாவட்டங்க ளில் உள்ள ஊர்களில் இந்த இயக்கத்தின் சார்பில் எஸ்.சி. எஸ்.டி. போக்குவரத்து தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் பதிவு செய்து இயங்கி வருகிறது. இதில் சுமார் 15,000 மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர் என்றும் 2026 இல் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் நீல புலிகள் இயக்கம் சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிப்பதாக அவர் தெரி வித்துள்ளார்.

### புதுச்சேரி மாநிலம் வில்லியனூர், ஒதியம்பட்டு கிராமத்தில்

# ஐந்தாண்டு சாதனைகளை எடுத்துக் கூறி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தீவிர வாக்குச் சேகரிப்பு!

புதுச்சேரி, மார்ச். 29-

வில்லியனூர் தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தாம் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி ஒதியம்பட்டு கிராம மக்களிடையே எதிர்க்கட்சித் தலைவரும், திமுக வேட்பாளருமான இரா.சிவா வாக்குகள் சேகரித்தார்.

புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் இரா. சிவா நேற்று காலை ஒதியம்பட்டு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒதியம்பட்டு, அன்பு நகர், பள்ளிக்கூட வீதி, மேட்டுத் தெரு, அண்ணா நகர், மாரியம்மன் கோவில் வீதி, திருமால் நகர், பழநியப்பா நகர், கோட்ரஸ், கே.வி. நகர், கண்ணதாசன் நகர், குறவன் குடிசை ஆகிய பகுதிகளில் வீடு, வீடாகச் சென்று ஐந்தாண்டுகளில் ஒதியம்பட்டு கிராம வளர்ச்சிக்கு தாம் செய்த பல்வேறு திட்டங்களை எடுத்துக்கூறியும், துண்டு பிரசுரம் வழங்கியும் வாக்கு சேகறித்தார். அப்போது மக்கள் மக்களுக்காக ஓடோடி உழைக்கும் உங்களுக்குத்தான் எங்கள் ஆதரவும், வாக்கும் என்று கூறி மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

முன்னதாக நேற்று மதியம் வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான் பேட் முஹம்மதியா பள்ளி வாசலில் தொழுகை முடிந்து வந்த இஸ்லாமியர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

வாக்குச் சேகரிப்பின் போது வில்லியனூர் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் தொகுதி சுல்தான்பேட் முஹம்மதியா பள்ளிவாசலில் தொழுகை முடிந்து வந்த இஸ்லாமியர்களிடம் தி.மு.க. வேட்பாளர் இரா. சிவா ஆதரவு திரட்டினார்.